அறிவிக்கை எண்.02/2023
நாள் : 16.10.2023

# ஆசிரியர் தேர்வு வாரியம்

**புரட்சித் தலைவர் டாக்டர் எம் .ஜி .ஆர் நூற்றாண்டு விழா கட்டிடம்**
**3 வது மற்றும் 4 வது தளம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,**
**கல்லூரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை –600 006.**
**வலைதளம்: https://www.trb.tn.gov.in**

---

## அறிவிக்கை

## முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டத்திற்கான (CMRF) தகுதித் தேர்வு

தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக, தமிழ்நாட்டை சார்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டத்திற்கான (CMRF) தகுதித் தேர்வு–2023–2024–க்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. நிகழ்நிலை (online) விண்ணப்ப முறையில் மட்டுமே 15.11.2023, மாலை 05.00 மணி வரை விண்ணப்பிக்க இயலும்.

முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டத்திற்கான **(CMRF)** தகுதித் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், 27.02.2023 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.53 உயர்கல்வித் **(ஜி1)** துறை–ல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி மற்றும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
G.O. Link : https://trb.tn.gov.in/admin/pdf/9291829130

- **தேர்வு செய்யப்படும் ஆராய்ச்சி மாணாக்கர்களின் எண்ணிக்கை –120 (கலை, மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் –60), (அறிவியல் –60)**

- **முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டம் – தகுதித் தேர்வுக்கான விண்ணப்பக் கட்டணம் / பதிவுக் கட்டணம் / தேர்வுக்கட்டணம் ஏதுமில்லை.**

# எச்சரிக்கை

- நியாயமற்ற வழிகளில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றும் முகவர்கள் மற்றும் ஏமாற்றுக்காரர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று ஆசிரியர் தேர்வு வாரியம் விண்ணப்பதாரர்களை எச்சரிக்கிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைக்கானத் தகுதித் தேர்வு முற்றிலும் தகுதி அடிப்படையிலானது .
- விண்ணப்பதாரர்கள் நேர்மையற்ற கூறுகளுடன் கூடிய எந்த விதமான பரிவர்த்தனைகளில் ஈடுபட்டாலும் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் எந்தவொரு இழப்புகளுக்கும் ஆசிரியர் தேர்வு வாரியம் பொறுப்பாகாது. மேலும் நிகழ்நிலை (online) விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்களுக்கும் அவர்களின் உரிமை கோரல்களுக்கும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே பொறுப்பு. முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைக்கானத் தகுதித் தேர்வுக்கு நிகழ்நிலையில் (online) விண்ணப்பிக்கும் போது ஏற்படும் தவறுகளுக்கு பிற இணைய சேவை மையங்களை குறை கூற முடியாது. எனவே விண்ணப்பதாரர்கள் தாங்களாகவோ அல்லது தங்கள் முன்னிலையிலோ நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களை பதிவேற்றி, நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை சரிபார்த்து, இறுதியாக அதைச் சமர்ப்பிக்கும் முன் விண்ணப்பதாரர்களின் தகவல்கள் சரியானதா என உறுதிசெய்த பின் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறு நேர்ந்தால், தவறுகளுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் பொறுப்பேற்காது. கடைசி தேதிக்குள் நிகழ்நிலை (online) விண்ணப்பத்த இறுதியாக சமர்ப்பித்த பிறகு, விண்ணப்பதாரர்களின் விபரங்களை எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது.

- நிகழ்நிலை (online) விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட அனைத்து விவரங்களுக்கு ஆதரவாக சான்றிழ்கள் / ஆவணங்களை விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக பதிவேற்ற வேண்டும், இல்லையெனில் நிகழ்நிலை (online) விண்ணப்பம் முற்றிலுமாக நிராகரிக்கப்படும். தேவையான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களைப் பதிவேற்றாமல் நிகழ்நிலை (online) இணையதளம் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளாது. ஆகவே விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் பதிவேறியுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.
- இத்தகுதித் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முன், **அறிவிக்கையில்** கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும், மற்றும் அரசாணை

(நிலை) எண்.53 உயர்கல்வித் **(ஜி1)** துறை **நாள்** 27.02.2023 தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் மற்றும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏதேனும் கேள்விகள் இருந்தால் நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிக்கு முன்பே மின்னஞ்சல் மூலம் தெளிவுபடுத்தப்படும். விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலை (online) விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளையும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

➢ **முக்கிய தேதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை தேதி | : | **16.10.2023** |
| ஆ | நிகழ்நிலை (online) முறையில் விண்ணப்பங்கள் பெறுதல் தொடங்கும் தேதி | : | **20.10.2023** |
| இ. | நிகழ்நிலை (online) முறையில் பூர்த்தி செய்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | : | **15.11.2023** |
| ஈ | முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டத்திற்கானத் தகுதித் தேர்வு நடைபெறும் தேதி | : | **10.12.2023** |

## 1. அறிமுகம்:

திறமையும் தகுதியுமுள்ள முதுநிலை பட்டதாரிகள் உயர்கல்வி மேம்பாடு மற்றும் தங்கள் வாழ்வியல் முன்னேற்றம் நோக்கி சீரான பாதையில் பயணிக்க சிறந்த ஆய்வாளர்களை உருவாக்கும் ஒரு வலிமையான ஆய்வுத் தளத்திற்கு முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத்திட்டம் (CMRF) வழிவகுக்கின்றது.

முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகை திட்டத்திற்கான தகுதித் தேர்வில் தேர்வு பெறும் தகுதியான ஆராய்ச்சியாளர்களுக்கு முழுநேர முனைவர் பட்டம் (Full Time Ph.D Programme) மேற்கொள்ள நிதியுதவி வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும்.

2. முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைக்கானத் தகுதித் தேர்வு பின்வரும் பாடப் பிரிவுகளில் நடத்தப்படும் :

## கலை, மனிதநேயம் & சமூக அறிவியல் பாடப்பிரிவுகள்:

| குறியீடு | பாடப்பிரிவு |
|---|---|
| A01 | தமிழ் |
| A02 | ஆங்கிலம் |
| A03 | வரலாறு |
| A04 | நிலவியல் |
| A05 | பொது நிர்வாகம் |
| A06 | அரசியல் அறிவியல் |
| A07 | சுற்றுலா & பயண மேலாண்மை |
| A08 | சமூகப் பணி |
| A09 | வணிக நிர்வாகம் & வணிக மேலாண்மை |
| A10 | பொருளியல் |
| A11 | வணிகவியல் |
| A12 | நூலகம் & தகவல் அறிவியல் |
| A13 | உளவியல் |
| A14 | இதழியல் & மக்கள் தொடர்பியல் |
| A15 | காட்சித் தொடர்பியல் |
| A16 | உடற்கல்வி |
| A17 | இசை |
| A18 | ஆடை வடிவமைப்பு மற்றும் ஃபேஷன் |

## அறிவியல் சார்ந்தப் பாடப்பிரிவுகள்:

| குறியீடு | பாடப்பிரிவு |
|---|---|
| S01 | கணித அறிவியல் (கணிதவியல், புள்ளியியல்) |
| S02 | இயற்பியல் அறிவியல் (இயற்பியல், மின்னணுவியல்) |
| S03 | வேதியியல் அறிவியல் (வேதியியல், உயிர்வேதியியல்) |
| S04 | உயிரின அறிவியல் (உயிரியல், விலங்கியல் தாவரவியல் /தாவர உயிரியல் மற்றும் தாவர தொழில்நுட்பவியல், நுண்ணுயிரியல், தொழில்நுட்பவியல்) |
| S05 | கணினி அறிவியல் ( கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம்) |
| S06 | புவி அறிவியல் (புவியியல்) |
| S07 | சுற்றுச்சூழல் அறிவியல் |
| S08 | மனையியல் |

**முக்கிய குறிப்பு :**

மேலே பட்டியலிடப்பட்டுள்ள பாடங்களைத் தவிர, அதற்கு சமமான பாடப்பிரிவுகளில் முதுநிலை பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்கள் அந்தந்த துறைகளில் பொருத்தமான பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்துகொள்ளலாம்.

## கலை, மனிதநேயம் & சமூக அறிவியல் மற்றும் அறிவியல் சார்ந்த பாடப்பிரிவுகள்

| தேர்வின் பெயர் | பாடப்பிரிவுகள் (ஸ்ட்ரீம்) | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத்திட்டம் 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான தகுதித் தேர்வு (CMRF) | 1.கலை, மனிதநேயம் & சமூக அறிவியல் பாடப்பிரிவுகள் | 60 |
| | 2.அறிவியல் சார்ந்தப் பாடப்பிரிவுகள் | 60 |
| | மொத்தம் | 120 |

### 3.பாடப்பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள்:

| கலை, மனிதநேயம் & சமூக அறிவியல் சார்ந்த பாடப்பிரிவுகள் | | |
|---|---|---|
| வ. எண் | பாடம் | தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை |
| 1 | தமிழ், ஆங்கில இலக்கியம் | 10 |
| 2 | வரலாறு, சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை, நிலவியல் | 10 |
| 3 | அரசியல் அறிவியல், பொது நிர்வாகம் | 10 |
| 4 | வணிகவியல், மேலாண்மை படிப்புகள், சமூகப் பணி | 10 |
| 5 | பொருளாதாரம் | 10 |
| 6 | காட்சித் தொடர்பியல், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல்,இசை, ஆடை வடிவமைப்பு மற்றும் ஃபேஷன், நூலகம் மற்றும் தகவல் அறிவியல், உடற்கல்வி, உளவியல் | 10 |
| | மொத்தம் | 60 |

| அறிவியல் சார்ந்த பாடப்பிரிவுகள் | | |
|---|---|---|
| **வ. எண்** | **பாடம்** | **தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை** |
| 1. | கணித அறிவியல் (கணிதவியல் / புள்ளியியல்) | 10 |
| 2. | இயற்பியல் அறிவியல் (இயற்பியல் / மின்னணுவியல்) | 10 |
| 3. | வேதியியல் அறிவியல் (வேதியியல்/உயிர் வேதியியல்) | 10 |
| 4. | உயிரின அறிவியல் (உயிரியல், விலங்கியல், தாவரவியல் / தாவர உயிரியல் & தாவர உயிரி தொழில்நுட்பம், நுண்ணுயிரியல், உயிரி தொழில்நுட்பம்) | 10 |
| 5. | கணினி அறிவியல் , தகவல் தொழில்நுட்பம் | 10 |
| 6. | சுற்றுச்சூழல் அறிவியல் / புவியியல் /மனையியல் | 10 |
| | **மொத்தம்** | **60** |

**குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.**

**4. தகுதிகள்:**

**அ. முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டம் – தகுதி:**

(i) தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டிருத்தல் அவசியம்.

(ii) தமிழ்நாட்டில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் / பல்கலைக்கழங்கங்கள் மூலம் பெற்ற முதுநிலை பட்டம்.

(iii) முதுநிலை பட்டம் இறுதி பருவத்தில் உள்ள மாணவர்களும் முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைக்கான தகுதித் தேர்வு எழுதலாம், ஆனால், தகுதித் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் பொழுது, முதுநிலை படிப்பில் தேர்ச்சி பெற்று, உரிய விதிமுறைகளுக்குட்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) SC / SCA / ST / மாற்றுத்திறனாளிகள் / பெண்கள் ஆகிய விண்ணப்பதாரர்களுக்கு முதுநிலை பட்டப்படிப்பில் குறைந்தபட்சம் 55% மதிப்பெண்கள் அல்லது அதற்கு சமமான கிரேடு இருக்க வேண்டும். மற்றவர்கள் குறைந்தபட்சம் 60% மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பதாரர்கள் S.S.L.C, பன்னிரண்டாம் வகுப்பு அதற்கு இணையான பட்டயப்படிப்பு (Diploma), இளநிலை மற்றும் முதுநிலை பட்டம் என்ற வரிசையில் பயின்றிருக்க வேண்டும். (10+2+3+2 அல்லது 10+3+3+2 அல்லது 10+2+5 என்ற வரிசையில்) {5 வருட ஒருங்கிணைந்த பாடமாக இருந்தால் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்திலிருந்து படித்திருக்க வேண்டும்}.

## ஆ. தெரிவு செய்யும் நடைமுறை:

SC / SCA / ST / மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் 45%, மற்றவர்களுக்கு 50%. முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகை திட்டத்திற்கான **(CMRF)** தகுதித் தேர்வின் தரவரிசைப் பட்டியல் அடிப்படையிலும், இத்திட்டத்திற்கான விதிமுறைகளின் அடிப்படையிலும் தகுதியுள்ளோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

### 5. எழுத்துத் தேர்வு:

**எழுத்துத் தேர்வின் முறை :**

அதிகபட்ச மதிப்பெண்கள் – 100. [பகுதி அ –40, பகுதி ஆ – 60].

தேர்வின் கால அளவு 3 மணி நேரம்.

மாற்றுத் திறனாளிகள் தேர்வை முடிப்பதற்கான கால அளவு 4 மணி நேரம்.

**பகுதி அ – கொள்குறி வகை கேள்விகள், அதிகபட்ச மதிப்பெண்கள் 40 (40x1=40) – கால அளவு ஒரு மணி நேரம் – ஒளிக்குறி மதிப்பெண் கணிப்பான் (Optical Mark Reader) முறை.**

பகுதி அ – கொள்குறி வகை கேள்விகளுக்கு தவறான பதில்கள் அளிக்கப்படின் **ஒவ்வொரு தவறான பதிலுக்கும் ஒரு மதிப்பெண் கழிக்கப்படும்.**

பகுதி ஆ – விளக்கமுறை கேள்விகள், அதிகபட்ச மதிப்பெண்கள் 60 (6x10=60) – கால அளவு இரண்டு மணி நேரம்.

முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத்திட்டம் **(CMRF)** 2023 ம் ஆண்டிற்கான தகுதித் தேர்வுக்கான பாடத்திட்டத்தினை எண்–2 இல் பட்டியலிடப்பட்டுள்ள துறைகளுக்கான குறியீடுகளின் வரிசையில் ஆசிரியர் தேர்வு வாரிய (TRB) இணையதளத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

| Sl.No | பொருள் | கேள்விகளின் எண்ணிக்கை | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண் கள் | குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | SC/SCA/ ST/ மாற்றுத் திறனாளிகள் / பெண்கள் | மற்றவர்கள் |
| 1 | பகுதி அ கொள்குறி வகை கேள்விகள் | 40 | 1 மணி நேரம் | 40 x1 = 40 | 100 க்கு 45 | 100 க்கு 50 |
| 2 | பகுதி ஆ விளக்கமுறை கேள்விகள் | 6 | 2 மணி நேரம் | 6 x 10 = 60 | | |

- முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டத்திற்கான **(CMRF)** தகுதித் தேர்வு 2023 (கொள்குறி வகை மற்றும் விளக்கமுறை கேள்விகள்), நாள், நேரம் மற்றும் தேர்வு மையம், விண்ணப்பதாரர்களுக்கான நுழைவுச்சீட்டில் (Hall Ticket), தெளிவாகக் கொடுக்கப்படும். நுழைவுச்சீட்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தின் http://www.trb.tn.gov.in மூலம், மேலும் விவரங்களை அறிந்து, நுழைவுச்சீட்டைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். எந்த சூழ்நிலையிலும் தேர்வு மையம் மாற்றப்படமாட்டாது.
- தேர்வு எழுதுபவர்களுக்கு நுழைவுச்சீட்டு தனியாக அனுப்பப்படமாட்டாது.
- எந்த எழுத்துப்பூர்வ தகவல்களும் தனித்தனியாக விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்படமாட்டாது.
- எழுத்துத் தேர்வில் பங்கேற்பதன் மூலம் மட்டுமே உதவித்தொகை திட்டத்தின் தெரிவிற்கு அவர்களின் கோரிக்கையை ஏற்க முடியாது.
- மாற்றுத் திறனாளிகளின் தொடர்பு முகவரியின் அடிப்படையில், அந்த மாவட்டத்தில் தேர்வு மையம் ஒதுக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் ஏதேனும் ஒரு தேர்வு மையம் ஒதுக்கப்படும்.

## விண்ணப்பிக்கும் முறை :

(i) **முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்ட (CMRF) தகுதித் தேர்வு 2023–24க்கு விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் எதுவும் இல்லை.**

(ii) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்கு முன் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் (TRB) அறிவிக்கை மற்றும் இணையதளத்தில்

**கொடுக்கப்பட்டுள்ள "விண்ணப்பிக்கும் முறை"** என்ற பகுதியையும் கவனமாக படிக்க வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் ( **இணையதள முகவர**[https://www.trb.tn.gov.in](https://www.trb.tn.gov.in)**)**. நிகழ்நிலை (online) முறையில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். வேறு எந்த முறையிலும் விண்ணப்பிக்க இயலாது

(iv) விண்ணப்பங்கள் பதிவு செய்யும் போதும், விண்ணப்பிக்கும் போதும் பயன்பாட்டில் உள்ள சரியான அலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரியைக் கொடுக்க வேண்டும். எதிர்கால தகவல் பரிமாற்றத்திற்கு அலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரியைத் தொடர்ந்து செயல்பாட்டில் வைக்கவும்.

**(v)** நிகழ்நிலை (online) முறையில் விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்படும் தகவல்களுகக்கான சான்றுகள் / ஆதாரங்களை பதிவேற்றம் செய்யவேண்டும், மூலச் சான்றிதழ்கள், தெரிவு செய்யப்படும் போது கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தால் சரிபார்க்கப்படும்.

(vi) நிகழ்நிலை (online) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து விவரங்களும் (பெயர், பாலினம், விண்ணப்பிக்கும் பாடப்பிரிவு, இனம், பிறந்ததேதி, முகவரி மற்றும் இதர) இறுதியான ஆவணங்களாகக் கருதப்படும். தேவைப்படின், விண்ணப்பத்தில் கோரப்பட்ட தகவல்களை அதிகமாக சேர்க்கவோ, நீக்கவோ மாற்றங்கள் செய்யவோ இயலும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் ஏதேனும் மாற்றங்களை செய்ய நினைத்தால் இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பாகவே மாற்றங்களை செய்துகொள்ள வேண்டும்.

(vii) முழுமையற்ற அல்லது குறைபாடுள்ள விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். இது தொடர்பான விளக்கமோ, தகவல் பரிமாற்றமோ மேற்கொள்ளப்படாது.

(viii) விண்ணப்பத்தை முழு கவனத்துடன் பூர்த்தி செய்யவேண்டும். விண்ணப்பதாரரிடமிருந்து ஒன்றிற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பின், இறுதியாக பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் மட்டுமே ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பரிசீலிக்கப்படும்.

## 7. சான்றிதழ்கள் / ஆவணங்களின் பதிவேற்றம் :

விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பத்தில் கோரப்பட்ட அனைத்து சான்றிதழ்கள் மற்றும் பின்வரும்

ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படாவிட்டால் விண்ணப்பத்தாரரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

## A. தகுதிச் சான்றிதழ்கள்:

நிகழ்நிலை (online) விண்ணப்பத்துடன் பின்வரும் மூலச் சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள் விண்ணப்பதாரர்களால் ஸ்கேன் (Scan) செய்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்:

(i) 10 ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்

(ii) 12 ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அல்லது அதற்கு சமமானது.

(iii) **இளநிலை பட்டப்படிப்பு சான்றிதழ்**

அ. ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் – இல்லையெனில் அனைத்து பருவங்களுக்குமான மதிப்பெண் பட்டியல்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆ. பட்டப்படிப்பு சான்றிதழ் அல்லது அதற்கான தற்காலிக சான்றிதழ்.

(iv) **முதுநிலை பட்டப்படிப்பு சான்றிதழ்**

அ. ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் – இல்லையெனில் அனைத்து பருவங்களுக்குமான மதிப்பெண் பட்டியல்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆ. பட்டத்திற்கான சான்றிதழ் அல்லது அதற்கான தற்காலிக சான்றிதழ்.

(v) சாதிச் சான்றிதழ்

(vi) மாற்றுத்திறனாளி சான்றிதழ் (தேவைப்படின்)

(vii) முன்னாள் படைவீரர் சான்றிதழ் (தேவைப்படின்)

(viii) கடைசியாக படித்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நன்நடத்தைச் சான்றிதழ்

(ix) அரசிதழ் பதிவு பெற்ற அரசாங்க அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ஒழுக்கச் சான்றிதழ் – **Character Certificate from a Gazetted Officer** (இணைப்பு – I இல் உள்ள படிவம்).

**B : சாதிச் சான்றிதழ்**

**இனவாரியான இடஒதுக்கீட்டு முறையில் சேர்க்கைக்கு தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள், பின்வரும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளிடமிருந்து சாதிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்**:

(i) ST – வருவாய் கோட்டாட்சியர் (11.11.1989 க்குப் பிறகு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தால்)

(ii) SC/SCA – விண்ணப்பதாரரின் சொந்த தாலுகாவின் வட்டாட்சியர்.

(iii) BC, BCM மற்றும் MBC / DNC – தலைமையக துணை வட்டாட்சியர் அல்லது சிறப்பு துணை வட்டாட்சியர்.

(iv) வேறு எந்த மாநில அல்லது யூனியன் பிரதேச அதிகாரிகளால் வழங்கப்படும் சாதிச் சான்றிதழ்கள் பெற்றிருப்பின், 69% வகுப்புவாரி இட ஒதுக்கீட்டில் பரிசீலிக்கப்படாமல் பொதுப் பிரிவினராகக் கருதப்படுவர் (GT).

**C : மாற்றுத்திறனாளி சான்றிதழ்**

மாற்றுத்திறனாளி **விண்ணப்பதாரர்கள்** உரிய அரசு அதிகாரியால் வழங்கப்பட்ட மாற்றுத்திறனாளி சான்றிதழுடன் அடையாள அட்டை மற்றும் அதற்குரிய புத்தகத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

**8. மாற்றுத் திறனாளிகளுக்காக தேர்வு எழுதும் எழுத்தர் :**

தகுதியுடைய மாற்றுத் திறனாளிகள் நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை நிரப்பும்போது மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் மருத்துவ வாரியத்தின் சான்றிதழ் ஆகியவற்றை பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

தேர்வு எழுத எழுத்தர் தேவையெனில், நிகழ்நிலை விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டப்படி **மாற்றுத் திறனாளிகளுக்காக தேர்வு எழுதும் எழுத்தர்** அனுமதிக்கப்படுவார்.

**9. தேர்வு முடிவுகள் எழுத்துத் தேர்வு மதிப்பெண்கள் வெளியீடு**

அனைத்து விண்ணப்பதாரர்களின் எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண்களும் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு, செய்தி குறிப்பு வெளியிடப்படும். **இதன் தொடர்ச்சியாக கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தால், தெரிவு செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்படும்**.

**10. சான்றிதழ் சரிபார்ப்பு (C.V.) :**

முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்ட (CMRF) தகுதித் தேர்வுக்கான மதிப்பெண்கள் வெளியிடப்பட்ட பிறகு, கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தால் சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும். சான்றிதழ் சரிபார்ப்பின் போது மூலச்சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சரிபார்க்கப்படும் .

**11. தவறான நடத்தையின் காரணமாக குற்றவாளியாகக் கண்டறியப்படும் விண்ணப்பதாரர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை**:

விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது தவறான விவரங்கள் மற்றும் தகவல்கள் வழங்கக் கூடாது எனவும், தவறான செயலையோ தகவலையோ மறைக்கக் கூடாது எனவும் எச்சரிக்கப்படுகிறார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், ஒரு ஆவணத்தில் உள்ள எந்தவொரு பதிவையும்

மாற்றவோ அல்லது சேதப்படுத்தவோ அல்லது சிதைக்கப்பட்ட புனையப்பட்ட ஆவணத்தின் விவரங்களைச் சமர்ப்பிக்கவோ முயற்சிக்கக் கூடாது. விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் தவறு அல்லது முரண்பாடு இருந்தால், விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**தேர்வு மையங்களின் வளாகத்தில் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டிருந்தால், எந்த நிலையிலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்:**

(i) தேர்வு மையங்களின் வளாக அறைக்குள் நேரிலோ அல்லது வேறு வகையிலோ மொபைல் போன் மற்றும் துணைக்கருவிகள், புளூடூத் சாதனங்கள் மற்றும் பிற மின்னணு சாதனங்கள், பயன்பாட்டில் இருந்தாலும் சரி, அணைக்கப்பட்ட முறையில் இருந்தாலும் சரி.

(ii) முறைகேடுகளில் ஈடுபடுதல்.

(iii) தேர்வு மையங்களின் வளாக அறைக்குள் நியாயமற்ற வழிகளைப் பயன்படுத்துதல்.

(iv) தெரிவிற்காக, எந்த வடிவத்திலும் முறையற்ற வழிகளில் ஏதேனும் செயல்கள் மேற்கொள்ளுதல் .

(v) ஆள்மாறாட்டம்.

(vi) தேர்வுக்கான அவரது விண்ணப்பம் தொடர்பாக வேறு ஏதேனும் ஒழுங்கற்ற அல்லது முறையற்ற வழிகளை நாடுதல்.

(vii) மேற்பார்வையாளர், கண்காணிப்பாளர் அல்லது ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பிரதிநிதிகளுடன் தேர்வு கூடத்தில் தவறாக நடந்துகொள்ளுதல், மிரட்டுதல் அல்லது உடல்ரீதியாக தீங்குவிளைவித்தல்.

(viii) ஆசிரியர் தேர்வு வாரியம் விண்ணப்பத்தாரரின் செயல் கண்டிக்கத்தக்கதாக இருந்தால் தேர்வின் எந்தக் கட்டத்திலும் விண்ணப்பத்தை ரத்து செய்யலாம்.

**12. குற்றவியல் வழக்குகள் (அல்லது) ஒழுங்குமுறை வழக்குகள் தொடர்பான பிரகடனம் :**

(i) தங்கள் நிகழ்நிலை (online) விண்ணப்பத்தில் நிலுவையில் உள்ள குற்ற வழக்கு அல்லது ஒழுக்காற்று வழக்குகளை கொண்ட விண்ணப்பதாரர்கள், முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) அல்லது குற்றப் பத்திரிகையின் நகலை வழக்குக்கான நிகழ்நிலை (online) விண்ணப்பத்துடன் பதிவேற்ற வேண்டும். பதிவேற்றத் தவறினால், உரிய செயல்முறைக்குப் பிறகு விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(ii) குற்ற வழக்குகளில் தண்டனை அல்லது ஒழுக்காற்று வழக்குகளில் தண்டனை பெற்ற விண்ணப்பதாரர்கள் தங்கள் நிகழ்நிலை (online) விண்ணப்பத்துடன் தொடர்புடைய நீதிமன்ற உத்தரவுகள் அல்லது நடவடிக்கைகளின் குறிப்பாணையைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்

அத்தகைய ஆவணங்களைப் பதிவேற்றத் தவறினால், உரிய செயல்முறைக்கு பிறகு விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்

(iii) நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை விண்ணப்பித்த பின்னால் விண்ணப்பதாரர்கள் மீது கிரிமினல் வழக்கு அல்லது ஒழுங்காற்று நடவடிக்கையோ எடுக்கப்பட்டாலோ அல்லது தண்டனை விதிக்கப்பட்டாலோ உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். தவறினால் எந்தக் கட்டத்திலும் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். மேலும் ஒரு வருட காலத்திற்கு தடை விதிக்கப்படும்.

(iv) ஆசிரியர் தேர்வு வாரியம் அல்லது அரசின் மற்ற வேலை வாய்ப்பு அமைப்புகள் அல்லது வேலை நிறுவனங்களில் ஏற்கனவே நிரந்தரமாக அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (தகுதித்தேர்வின் நாள் உள்ளடங்கிய) விண்ணப்பிக்க தடை செய்யப்பட்டிருப்பின் **முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்ட (CMRF) தகுதித் தேர்வுக்காக** விண்ணப்பித்தல் கூடாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**13. பொதுவான தகவல்கள் :**

(i) விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலையில் (online) விண்ணப்பிக்கும் போது, வெள்ளைநிற பின்னணியுடன் கூடிய சமீபத்திய வண்ண புகைப்படம் கடவுச்சீட்டு அளவு 20–60 KB (JPG /JPEG / PNG) கையொப்பத்தின் அளவு 10–30 KB (JPG / JPEG / PNG ) ஆகியவற்றைப் பதிவேற்ற வேண்டும். விண்ணப்பதாரரின் புகைப்படம் மற்றும் கையொப்பம் இல்லாமல் பதிவேற்றப்பட்ட நிகழ்நிலை விண்ணப்பம் கண்டிப்பாக நிராகரிக்கப்படும் . இது தொடர்பாக எந்த தகவல் பரிமாற்றமும் நடத்தப்படாது.

(ii) விண்ணப்பதாரர்கள் கடவுச்சொல் பாதுகாக்கப்பட்ட ஆவணங்களின் நகலை பதிவேற்றுவதைத் தவிர்க்க வேண்டும்.

(iii) பதிவேற்றிய ஆவணங்கள் தெளிவாகத் தெரியாமல் போகலாம் என்பதால், விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் ஆவணங்களை ஸ்கேன் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

(iv) தேவையான ஆவணங்கள் முறையாக பதிவேற்றம் செய்யப்படவில்லை எனில், நிகழ்நிலை (online) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகலைப் பதிவேற்றம் செய்யும் பொறுப்பு விண்ணப்பதாரர்களிடம் உள்ளது. நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு எந்தவொரு கோரிக்கையும் எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(vi) அறிவிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை தற்காலிகமானது மேலும் அது மாற்றத்திற்கு உட்பட்டது.

(vii) விண்ணப்பதாரர்கள் எந்த மதிப்புமிக்க பொருட்களையும் தேர்வு மையத்திற்கு கொண்டு வரக்கூடாது. மதிப்புமிக்க பொருட்களை பாதுகாப்பதற்கு ஆசிரியர் தேர்வு வாரியம் பொறுப்பேற்காது.

(viii) விண்ணப்பதாரர்கள் தேர்வில் கலந்து கொள்ள தங்கள் சொந்த செலவில் வந்து போக வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்பட்டால், TA / DA வழங்கப்படாது.

(ix) தேர்வுமுறைச் செயல்பாட்டில், ஆசிரியர் தேர்வு வாரியம் / கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் முடிவே இறுதியானது.

(x) முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்டத்திற்கான (CMRF) ஆய்வாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் முடிவே இறுதியானது.

(xi) நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் கடைசி தேதி வரை சமர்ப்பிக்கலாம், அதன் பிறகு இணைப்பு முடக்கப்படும்.

**14. கோரிக்கை :**

அறிவிக்கை / நிகழ்நிலை விண்ணப்பம் தொடர்பான ஏதேனும் சந்தேகம் இருந்தால் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் தெளிவுபடுத்திக் கொள்ளலாம் trbgrievances@tn.gov.inஅஞ்சல் வழியிலோ , நேரிலோ, வாட்ஸ்அப் மூலமாகவோ ,பிற தொடர்பு முறைகளிலோ ஆசிரியர் தேர்வு வாரியத்தை தொடர்பு கொள்ள முடியாது.

**15. விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பு:**

சான்றிதழ் சரிபார்ப்பு (CV) தேதி மற்றும் நேரம் தொடர்பான தகவல்கள் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தால் அவர்களின் இணையதளத்தில் www.tndce.tn.gov.in இல் தெரிவிக்கப்படும்.

அனைத்து விதமான தகவல்களையும் விண்ணப்பதாரர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் இணையதளங்களின் வழியாக தொடர்ந்து அறிந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

16. **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலையில் (online) சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 15.11.2023 மாலை 5.00 மணி வரை. அதன் பிறகு நிகழ்நிலை (online) இணைப்பு முடக்கப்படும். முழுமையற்ற நிகழ்நிலை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**

# இணைப்பு –I

## படிவம்

## ஒழுக்கச் சான்றிதழ்

...........................................................................என்பவரின் மகன்/ மகள்/ மனைவி ஆகிய, திரு/ திருமதி /செல்வி ---------------------- என்பவர் -------------- ------------------------------------ என்னும் முகவரியில் வசிக்கிறார்.

இவரை எனக்கு -------வருடங்களாகவும் -----மாதங்களாகவும் நன்கு தெரியும் என்று சான்றளிக்கப்படுகிறது. அன்னாரது குணம் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின்படி திருப்திகரமாக/ நன்றாக உள்ளது.

இந்த **ஒழுக்கச்** சான்றிதழ் **முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் திட்ட** (CMRF) தகுதித் தேர்வில் பங்கேற்கும் நோக்கத்திற்காக மட்டுமே வழங்கப்படுகிறது.

தேதியுடன் அரசிதழ் அதிகாரியின் கையொப்பம்:

அரசிதழ் அதிகாரியின் பெயர்:

பதவி:

அலுவலக முத்திரை